TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**
**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**

# Part VI --- Section 2
(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**தமிழ்நாடு மின்சார வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு**

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SC/7–3 , 10. 04. 2007 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்படுவதாலும், மற்றும் அறிவிக்கை செய்யப்படுவதாலும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2இல் வெளியிட்டிருப்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தகவலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள விதித்தொகுப்பிலுள்ள கட்டுப்படுத்தும் வகைமுறைகள் இல்லாதிருக்கையில், தேவையில் அடிக்கடி குறைத்தல் ஏற்படுவதினால் மின் கொள்முதல் திட்டத்தில் ஒரு சில இடர்ப்பாடுகள் இருப்பதாலும்,

மற்றும் நுகர்வோர்களின் தேவைக்குறைப்பு பொறுத்த இடர்ப்பாடுகளை அகற்றும் பொருட்டு தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்குத்

திருத்தங்களைச் செய்வது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதாலும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு, அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன் மூலம் பின்வரும் திருத்தங்களை குறித்துரைக்கிறது :

**2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு.**

1. **குறுந்தலைப்பும் மற்றும் தொடக்கம் :**

(a) இந்த விதித் தொகுப்பு, “2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வழங்கல் (திருத்தம்) விதித் தொகுப்பு'' என்று வழங்கப்பெறும்.

(b) இது, தமிழ்நாடு அரசிதழில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. **தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள 17ஆம் ஒழுங்குமுறைவிதித் திருத்தம் செய்தல் :**

தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பிலுள்ள 17ஆம் ஒழுங்குமுறைவிதியில், பின்வரும் உள்–ஒழுங்குமுறைவிதி சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :

“ (6)

(i) தொடக்க உடன்பாட்டுக் காலமானது, மின்வழங்கல் கிடைத்த தேதியிலிருந்து ஓர் ஆண்டு ஆகும் மற்றும் ஒப்பந்தம் பெற்றத் தேவையிலுள்ள குறைப்பு எதற்கும் பொருந்துதல் ஆகாது.

(ii) தொடக்க உடன்பாட்டுக்காலமான ஓர் ஆண்டு முடிந்த பின்பு நுகர்வோர், தம்முடைய தேவைக்காகவும், குறைப்பிற்காகவும் அத்தகைய குறைப்பிற்கான கட்டணம் எதுவும் செலுத்தாமல் ஆண்டிற்கு ஒருமுறை விண்ணப்பிக்கலாம். ஓர் ஆண்டில் இரண்டாவது மற்றும் பிந்திய

குறைப்பிற்காக, ஒப்படைக்கப்பட்ட தேவைக்கான தேவைக் கட்டணங்களின் இரண்டு மடங்கு கட்டணங்களை ஒரே தடவையில் செலுத்துவதற்கு நுகர்வோர் உள்ளாதல் வேண்டும்.

(iii) நுகர்வோர், தேவையைக் குறைப்பதற்காக விண்ணப்பிக்கும் சமயத்தில், அப்போது இருந்து வரும் ஒப்பந்தம் பெற்ற தேவையின் 50 விழுக்காடு வரை மட்டுமே தேவைக்காகவும், அதனைக் குறைப்பதற்காகவும் விண்ணப்பித்தல் வேண்டும்.

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

**இரா. பாலசுப்பிரமணியன்**
**செயலாளர்**